தமிழ்நாடு அரசு

சுருக்கம்.

மோட்டார் வாகனம் – நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் – நகராட்சிகள் மற்றும் நகரியங்களுக்கு புதிய மோட்டார் வாகனங்கள் வாங்க மற்றும் பழைய வாகனங்களை பயனற்றதாகக் கழித்த புதிய வாகனங்கள் வாங்குதல் – நகராட்சி நிர்வாக இயக்குநரின் ஒப்புதல் பெற்று வாங்குவது குறித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந4) துறை

அரசாணை (நிலை) எண்.469 நாள்: 27.7.89

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.218, நிதித்துறை; நாள்.13.3.80
2. அரசாணை (நிலை) எண்.325, ஊ.வ.உ.து.துறை, நாள்.5.4.84.
3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித எண்.31249/89/டி1, நாள்.28.4.89.

...

ஆணை:

நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் தங்களுக்குத் தேவையான புதிய மோட்டார் வாகனங்களை அதன் நிதியிலிருந்து வாங்க பார்வை 1ல் படிக்கப்பட்டுள்ள அரசாணையின்படி அமைக்கப்பட்டுள்ள மூன்று அலுவலர்கள் கொண்ட குழுவின் ஒப்புதல் பெற்றே வாங்க வேண்டும். மேலும் அரசாணை (நிலை) எண்.325, ஊ.வ.ம.உ.து.துறை, நாள்.5.4.84ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி நகராட்சிகள் மற்றும் நகரியங்களிலுள்ள பயனற்ற மோட்டார் வாகனங்களைக் கழிவு செய்ய அனுமதி அளிக்கும் அதிகாரம் மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலம் மற்றும் தூரம், ஓடாத மோட்டார் வாகனங்களை பயனற்றதாகக் கழிவு செய்ய நகராட்சி மற்றும் நகரியங்களிலிருந்து அரசுக்கு வரும் செயற் குறிப்பினை மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறை இயக்குநரிடமும், நகராட்சி நிர்வாக இயக்குநரிடமும் கலந்து ஆலோசித்து முடிவு செய்த அதன் பின்னர் மேற்படி வாகனங்களை பயனற்றதாக கழிவு செய்ய ஆணை வெளியிடும் முறை நடைமுறையில் உள்ளது.

2. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவரது 25.4.89-ஆம் நாளிட்ட கடிதத்தில் நிதிநிலை நல்ல நிலையில் உள்ளபோதும், சுகாதாரப் பணிகளுக்காகவும் ஏனைய அலுவலகப் பணிகளுக்காகவும், தேவைப்படும் புதிய மோட்டார் வாகனங்களையோ அல்லது பழைய வாகனங்களைக் கழிவு செய்து அதற்கு பதில் வேறு புதிய வாகனங்களையோ நகராட்சிகளால் அதன் நிதியிலிருந்து வாங்க இயலாமல் போய் விடுகிறது என்றும், மோட்டார் வாகனங்கள் வாங்குவதற்கு தற்போதுள்ள முறையைக் கையாளுவதனால் நகராட்சிப் பணிகள் செய்வதில் மிக்க காலதாமதம் ஏற்படுகிறது என்றும், தற்போது பயனற்று போய் கழிவு செய்யும் நிலைமை அடைந்த வாகனங்களை பழுது நீக்கம் செய்து மீண்டும் பயன்படுத்துவதன் காரணத்தால் நகராட்சிகளுக்கு அதிகமான செலவு ஏற்படுகிறது என்றும் நகராட்சிகள் நிர்வாக சம்பந்தமாக அன்றாடம் நேரிடக்கூடிய கஷ்டங்களைப் பற்றி சமீபத்தில் நடந்த நகர்மன்றத் தலைவர்கள் கூட்டத்தில் பேசும்போது, மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) அவர்களின் கவனத்திற்கு நகர்மன்றத் தலைவர்களால் கொண்டுவரப் பட்டுள்ளது என்றும், எனவே நகராட்சிகள் அதன் நிதியிலிருந்து மோட்டார் வாகனங்கள் புதியதாக வாங்க தற்போது கடைபிடிக்கும் முறையை மாற்றி நிதிநிலை நன்றாக உள்ள நகராட்சிகள்

மற்றும் நகரியங்கள், நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் நேரடியாக அனுமதி பெற்று வாங்குவதற்கு அனுமதி அளித்து அரசு ஆணை பிறப்பிக்கும்படியும், நகராட்சி மற்றும் நகரியங்களில் தற்போது பழுதுபட்ட மோட்டார் வாகனங்களை உள்ளூர் வாகன ஆய்வாளரின் சான்றிதழ் பெற்று நகராட்சிகள் மற்றும் நகரியங்களே பயனற்றதாகக் கழிவு செய்ய அனுமதி அளிக்கும்படியும் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2ல் கண்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு தீவிரமாக ஆராய்ந்து, கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடுகிறது:-

(1) நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் ஏற்கனவே வாங்கப்பட்ட வாகனங்களைக் கழிவு செய்து மாற்று வாகனங்களை வாங்குவதற்கு அரசின் அனுமதி தேவையில்லை. தற்போது வாகனங்களைக் கழிவு செய்வதற்காக வகுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மோட்டார் வாகன ஆய்வாளரின் சான்றிதழ் பேரில் நகராட்சி நிர்வாக இயக்குநரின் முன் அனுமதி பெற்றபின் வாகனங்கள் வாங்க அனுமதி அளிக்கப்படுகிறது.

(2) புதிய வாகனங்களைப் பொறுத்தவரை போதுமான அளவு நிதி வசதி இருக்கக் கூடிய நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் நகராட்சி நிர்வாக இயக்குநரின் முன் அனுமதியின் பேரில் வாகனங்கள் வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. ஆனால் நிதிநிலைமை கணக்கிடும் பொழுது நகராட்சி நிர்வாக இயக்குநர் சரியான உபரி தொகை இருக்கிறதா என்று கவனிக்கவேண்டும். இதற்குத் தனியாக, பின்பற்றத்தக்க வழிமுறைகளை ( guidelines ) நகராட்சி நிர்வாக இயக்குநர் வகுக்கவேண்டும். அப்படி வகுக்கப்பட்ட வழிமுறைகளை உடனே அரசுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(3) உபரி தொகை இல்லாத நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் புதிய வாகனங்களை வாங்குவதற்கு அரசிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்றும் இப்படிப்பட்ட நகராட்சிகள்/ நகரியங்கள் முன் அனுமதியின்றி புதிய வாகனங்கள் வாங்கக் கூடாது என்றும் வலியுறுத்தப்படுகிறது.

4. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.88442/ நிதி (ந.நி.மது.வ.) துறை, நாள்.27.7.89-ல் வழங்கியுள்ள ஒப்புதலின்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. நடராசு,
அரசுச் செயலாளர்

பெறுநர்:
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-600005.
ஆய்வாளர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை-600 002.
இயக்குநர், மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை, சென்னை-600 0.03.
தலைமைப் பொறியாளர், விவசாய பொறியாளர் துறை, நந்தனம், சென்னை.600035.
நகல்:
ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-600009. (2 பதிவுகள்)
நிதித்துறை, சென்னை-600009.
போக்குவரத்துத் துறை, சென்னை-600009.
ஊரக வளர்ச்சித்துறை, சென்னை-600009/உள் துறை (போக்குவரத்து.IV) சென்னை-9.
உ.ந.

// உண்மை நகல் // ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர். 27.7.89